
# மாலைக்கதிர்

Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel


சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 12 புதன்கிழமை 29.10.2025 கதிர் 354



## செவ்வந்திக்கு உதவிய பெண் சட்டத்தரணி கைது!

கொழும்பு, ஒக். 29

பாதாளக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலைச்சம்பவம்தொடர்பாகக்கைது செய்யப்பட்டுள்ள ,ஷாரா செவ்வந்திக்கு உதவினார் எனக் கூறப்படும் பெண் சட்டத்தரணி ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவவைப் படுகொலை செய்வதற்காக வந்த ,ஷாரா செவ்வந்திக்கு, கைத்துப்பாக்கியை மறைத்து எடுத்து வருவதற்காக 'தண்டனைச் சட்டக்கோவை' நூலின் பிரதியொன்றை ,ந்தச் சட்டத்தரணியே வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பெண் சட்டத்தரணி நேற்று ,ரவு கடவத்தைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி, வழக்கு விசாரணையொன்றுக்காக சிறைச்சாலை அதிகாரிகளால் புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட கணேமுல்லசஞ்சீவ, அந்த நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

7➤

# மாகாணத் தேர்தலை பழைய முறைமையில் விரைவில் நடத்துங்கள்

## அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



கொழும்பு, ஒக். 29

மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறைமையின் கீழ் விரைவில் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். பழைய முறைமையின் கீழ் அந்தத் தேர்தலை நடத்தலாம். அவ்வாறு இல்லையேல் தேர்தல் மேலும் இழுத்தடிக்கப்படக்கூடும். விரைவில் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையே நாம் விடுக்கின்றோம்.

மாகாண சபை முறைமை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. எனினும், வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மாகாணச பை முறைமை அவசியம். அதனை நான் ஏற்கின்றேன். அதற்குரிய நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும்." - என்றார்.

## டொப்பாஸ் வனப் பகுதியில் இளைஞரின் சடலம் மீட்பு!



நுவரெலியா, ஒக். 29

நுவரெலியாவில் டொப்பாஸ் வனப்பகுதியில்இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, சாந்திபுர பகுதியைச் சேர்ந்த 27 வயதான ரோஷன் லக்மால் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

7➤

## அரசுக்கு எதிரான புதிய கூட்டு: மலையகக் கட்சிகள் கைவிரிப்பு



கொழும்பு, ஒக். 29

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்க்கட்சிகளால் முன்னெடுக்கப்படவுள்ள அரச எதிர்ப்புக் கூட்டத்தில் மலையகக் கட்சிகள் பங்கேற்காதென நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராகவே நவம்பர் 21 ஆம் திகதி இந்த கூட்டம் நடத்தப்படுகின்றது என எதிரணிகள் அறிவித்துள்ளன.

7➤

## ரணிலுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு கோட்டை நீதிவான் நெத்தி குமார இன்று புதன்கிழமை பிற்பகல் உத்தரவிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப் பகுதியில், அவரது மனைவி பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டன் செல்வதற்கு அரச நிதியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னிலையாகியிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம்— கைதான சட்டத்தரணியை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி!

கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம்தொடர்பில் பெண் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவரை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து மேலதிக விசாரணை செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் சட்டத்தரணி ஒருவர் கடவத்தை பகுதியில் வைத்து நேற்று (28) இரவு கைது செய்யப்பட்டார்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவத்தின் போது இஷார செவ்வந்திக்கு, கைத்துப்பாக்கியை மறைத்து எடுத்து வருவதற்காக 'தண்டனைச் சட்டக்கோவை' நூலின் பிரதியொன்றை இந்தச் சட்டத்தரணியே வழங்கியுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

கணேமுல்ல சஞ்சீவ, வழக்கு விசாரணையொன்றிற்காக கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி அன்று புதுக்கடை நீதிமன்ற வழக்கத்துக்கு அழைத்துவரப்பட்ட வேளையில், அந்த நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்த துப்பாக்கிதாரி அன்றையதினமே பாதுகாப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட போதிலும், துப்பாக்கியை நீதிமன்ற வளாகத்திற்குள் கொண்டு வந்த இஷார செவ்வந்தி என்பவரைக் கைது செய்வதற்கு பாதுகாப்புப் பிரிவினர் கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

எனினும் தீவிர தேடுதல் நடவடிக்கையின் பின்னர் இஷார செவ்வந்தி கடந்த 14ஆம் திகதி நேபாளத்தில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் இஷார செவ்வந்தி தப்பிச் செல்வதற்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த பலரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவப் பயிற்சியின் போது கைக்குண்டு வெடித்து விபத்து!

கொழும்பு, ஒக் .29

மாதுரு ஓயா இராணுவப் பயிற்சி முகாமில் இடம்பெற்ற இராணுவப் பயிற்சியின் போது கைக்குண்டு வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மூன்று இராணுவ வீரர்களின் கால்களில்காயம்ஏற்பட்ட நிலையில்பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்திற்கும் ரஷ்ய இராணுவத்திற்கும் இடையில் இந்த நாட்களில் நடைபெறும் இராணுவப் பயிற்சியின் போது இந்த விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

## நாடெங்கிலும் உள்ள நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பு கமாராக்களை பொருத்த நடவடிக்கை



கொழும்பு, ஒக் .29

நாடெங்கிலும்உள்ள நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பு கமாராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாதுகாப்பு கமாராக்கள் பொருத்த ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு விடுக்கப்பட்டுள்ள உத்தரவின்படி பொலிஸ்தலைமையகத்துடன் இணைந்து இந்த ஏற்பாடு செய்யப்படும் எனவும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்பு பெறப்படும் என்றும் அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு கமாராக்கள் பொருத்தப்படும்என்றும், பின்னர் ஏனைய மாகாண நெடுஞ்சாலைகளிலும் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படும் எனவும் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நெடுஞ்சாலைகளில் ஏற்கனவே கமாரக்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும் கொழும்பில் உள்ள அனைத்து பிரதான வீதிகளிலும் பாதுகாப்பு கமாராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் கம்பஹா, களுத்துறை மாவட்ட நெடுஞ்சாலைகள் அதனுடன் இணைந்துள்ள பிரதான வீதிகளிலும் கமாராக்கள் பொருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வெலிகம பிரதேச சபை தலைவர் கொலை சம்பவம்- துப்பாக்கிதாரியின் வாக்குமூலம்!

வெலிகம பிரதேச சபை தலைவர் லசந்த விக்கிரமசேகர கொலை சம்பவம் தொடர்பில் துப்பாக்கிதாரி உட்பட இதுவரை 9 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பிரதேச சபை தலைவர் லசந்த விக்கிரமசேகர தனது அலுவலகத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், துப்பாக்கிதாரி, மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் உட்பட 9 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் துப்பாக்கிதாரி, மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர், துப்பாக்கிதாரியின் மனைவி, கெக்கிராவையில் மறைந்திருக்க உதவியவர், பொரளை சஹஸ்புர பகுதியில் துப்பாக்கிதாரிக்கு உதவிய இரண்டு நபர்கள் உட்பட 6 பேர் தற்போது பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் 72 மணிநேர தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொலை சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரிக்கு போக்குவரத்து மற்றும் வசதிகளை வழங்கிய மேலும் மூன்று சந்தேக நபர்கள் இன்று மாத்தறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் துப்பாக்கிதாரியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவர் கூறிய விடயங்களாவன,

கெக்கிராவை வீட்டிலிருந்து தப்பிச் சென்ற தான், பேரூந்தில் கொழும்புக்கு வந்து, பின்னர் பொரளை சஹஸ்புர பகுதிக்குச் சென்றதாக துப்பாக்கிதாரி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் இரண்டு நபர்களைச் சந்தித்து, அவர்களின் வீட்டிற்குச் சென்று குளித்துவிட்டு, தன்னிடம் இருந்த இரண்டு கையடக்கத் தொலைபேசிகளில் ஒன்றை அவர்களிடம் கொடுத்து, அதில் ஒரு பிரச்சினை இருப்பதால் வைத்திருக்கச் சொல்லியுள்ளார். மற்றைய சிறிய தொலைபேசியை மின்னேற்றம் செய்வதற்காக அவர்களிடம் கொடுத்துள்ளார்.

அதன்பிறகு அவர்கள் அறிந்த இடத்திற்குச் சென்று, தனது தலைமுடி மற்றும் தாடியை வெட்டி, தோற்றத்தை முழுமையாக மாற்றிக்கொண்டதாகவும் துப்பாக்கிதாரி கூறியுள்ளார்.

சந்தேக நபரின் வாக்குமூலங்களின்படி, வெலிகம பிரதேச சபை தவிசாளரின் படுகொலை 20 இலட்சம் ரூபா ஒப்பந்தத்திற்கு மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதற்காக துப்பாக்கிதாரிக்கு 15 இலட்சம் ரூபா மாத்திரமே கிடைத்துள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மேலதிக விசாரணைகளின் போதும் துப்பாக்கிதாரி இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பலமுறை பணம் கேட்டபோதிலும், அவருக்கு பணத்திற்கு பதிலாக போதைப்பொருள் வழங்கப்பட்டதாகவும் துப்பாக்கிதாரி வெளிப்படுத்தியுள்ளார்.

வெலிகம பிரதேச சபை தவிசாளரை படுகொலை செய்வதற்கான ஒப்பந்தத்தை, வெளிநாட்டில்தலைமறைவாக உள்ள ரஜித சம்பத் அல்லது 'டுபாய் லொக்கா' என்பவரே வழங்கியுள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, 'டுபாய் லொக்கா', 'மிதிகம சூட்டி' மற்றும் மற்றொரு நபர் ஆகியோர் துப்பாக்கிதாரியுடன் தொலைபேசியில் பேசி தவிசாளரை படுகொலை செய்யுமாறு பணிப்புரை விடுத்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அவர்கள் படுகொலையைச் செய்வதற்கு 02 மோட்டார் சைக்கிள்களையும் வழங்கியுள்ளதுடன், அவற்றில் ஒரு மோட்டார் சைக்கிள் தற்போது பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொலைக்குப் பின்னர் துப்பாக்கிதாரி உள்ளிட்ட குழுவினருக்கு கெக்கிராவையில் தங்குமிடம் வழங்கிய நபர், அப்பகுதியில் 'வடை' வியாபாரி என அழைக்கப்படுபவர் எனவும், அவருக்கு போதைப்பொருள் மற்றும் உணவுப் பொருட்களை வாங்கி வருவதற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் தலா 30,000 ரூபா வீதம் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வெலிகம பிரதேச சபை தவிசாளர், மக்கள் தினமன்று பிரதேச சபைக்கு வந்துள்ளதாக 'டுபாய் லொக்கா' துப்பாக்கிதாரிக்கு வழங்கிய தகவலுக்கமைய, துப்பாக்கிதாரி பிரதேச சபைக்கு வந்துள்ளார்.

சந்தேக நபர் தற்போது முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்கி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், இந்தக் கொலைக்கான காரணம் என்ன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

இவர்களுடன் கொலைக்கு முன்னரும் பின்னரும் துப்பாக்கிதாரிக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கிய காலி, அகுலுகஹ பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி, கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை பாவனைக்கு உகந்த வகையில் திருத்திக் கொடுத்த வலன பகுதியைச் சேர்ந்த வாகன திருத்துமிட உரிமையாளர் மற்றும் அந்த மோட்டார் சைக்கிளை கொலையாளிகளிடம் கொண்டு வந்து கொடுத்த பொல்அத்துமோதர பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஆகியோரும் வெலிகம மற்றும் மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட இந்த மூன்று சந்தேக நபர்களும் இன்று மாத்தறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.


இதன்போது, முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜரான பொலிஸ் அதிகாரி, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், வாகன திருத்துமிட உரிமையாளர் மோட்டார் சைக்கிளின் 'ஸ்டார்ட்டர் மோட்டரை' பொருத்துவதற்காக 400 ரூபா கட்டணம் பெற்றதாகவும், அது பாதுகாப்பு கெமராக்களில் தெளிவாக பதிவாகியுள்ளதாகவும் நீதிமன்றில் சுட்டிக்காட்டினர்.

எனவே, தமது சேவை பெறுநர் எந்தவொரு குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை அல்லது குற்றத்திற்கு உதவவில்லை எனவும் அந்த சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்ட மாத்தறை பிரதம நீதவான் சத்துர திசாநாயக்க, மேலதிக விசாரணை அறிக்கையை எதிர்வரும் 30ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன், சந்தேக நபர்கள் மூவரையும் அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். அதன்படி குறித்த மூன்று சந்தேக நபர்களும் நேற்று பிற்பகல் விளக்கமறியல் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ)

# மன்னாரில் மூன்று சீல்



மன்னார் நகர சபை எல்லைக்குள் பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்த உணவகம்,வெதுப்பகம் உட்பட வர்த்தக நிலையம் ஒன்றுமாக இவ்வாரம் மூன்று கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் உணவகங்கள் தொடர்பான ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் உள்ளடங்களாக மருத்துவ சான்றிதழ், உரிய அனுமதியின்றி இயங்கி வந்த வெதுப்பகம், உணவகம் மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உணவகங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக நகரசபைக்கு கிடைக்க பெற்று வரும் முறைப்பாடுகளின் அடிப்படையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் இனங்காணப்பட்ட நிலையில் குறித்த உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக மன்னார் மூர்வீதியில் சுகாதாரமற்ற முறையில் உணவுகளை களஞ்சியப்படுத்தி,உரிய அனுமதி பெறாது இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கும் மன்னார் உப்புக்குளம் பகுதியில் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்றுக்கும் மன்னார் பனங்கட்டு கொட்டு மேற்கு பகுதியில் இயங்கி வந்த ஒரு வர்த்தக நிலையத்திற்கு மேற்படி சீல் வைக்கப்பட்டுள்ளது

# தென்கிழக்கு விஞ்ஞான பீட விடுதியில் தீ



*சம்மாந்துறை தென்கிழக்கு விஞ்ஞான பீட விடுதியில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.*

*அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தென்கிழக்கு விஞ்ஞான பீடத்தின் மாணவர் விடுதியில் புதன்கிழமை (29) தீ விபத்து ஏற்பட்டிருந்தது.*

*இந்த தீ விபத்து, மின் கசிவால் ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் ஏற்பட்டதா? எனவிசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*குறித்த தீ விபத்தை கட்டுப்படுத்த அம்பாறை அக்கரைப்பற்று மற்றும் கல்முனை ஆகிய இடங்களிலிருந்து தீயணைப்புப்படையினர் வருகை தந்திருந்தனர்.*

*மேலும் சம்மாந்துறை பொலிஸார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை அல் உஸ்வா உயிர் காப்பு குழுவினர், இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள் , தீ விபத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.*

*குறித்த தீ விபத்தில் எந்தவொரு உயிர்சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுவதுடன் பல பொருட்கள் தீயில் எரிந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*சம்பவ இடத்திற்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா , சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர், தென்கிழக்கு பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் வருகை தந்திருந்தனர்.*

# கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன் கணவனும், மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய உப பொலிஸ் பரிசோதகர் ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்குச் சென்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்த 9 கிராமும் 610 மில்லிகிராம் கஞ்சாவையும், இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(28)அன்று ஆஜர்படுத்திய போது நவம்பர் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# இந்தியாவில் தயாரிக்கப்படும் ரஷ்யாவின் சுகோய் சூப்பர் ஜெட் விமானம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

இந்தியாவில் ரஷ்யாவின் சுகோய் சூப்பர் ஜெட் ளுது-100 விமானங்களை தயாரிப்பதற்காக, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட், ரஷ்யாவின் நிறுவனமான யுனைடெட் ஏர்கிராப்ட் கார்ப்பரேஷனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது.

சுகோய் சூப்பர் ஜெட் ளுது 100 என்பது ரஷ்யாவில் உருவாக்கப்பட்ட ஒரு இரட்டை இன்ஜின் கொண்ட குறுகிய தூர பயணிகள் விமானம். இது முன்னர் 'சுகோய் சூப்பர்ஜெட் 100' (ளுளுது100) என அழைக்கப்பட்டது. இந்த ஜெட் விமானங்களில் 200க்கும் மேற்பட்டவை ஏற்கனவே தயாரிக்கப்பட்டு உலகளவில் 16க்கும் மேற்பட்ட வணிக விமான நிறுவனங்களால் இயக்கப்படுகின்றன.






இந்த விமானம் 103 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது. தோராயமாக 3,530 கி.மீ. பறக்கும். இந்நிலையில், இந்தியாவின் மேக் இன் இந்தியா திட்டத்தின் மூலம்,ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (ஹெச்.ஏ.எல்.) நிறுவனம் ரஷ்யாவின் யுனைடெட் ஏர் கிராப்ட் நிறுவனமும் இணைந்து ளுது 100 பயணிகள் விமானங்களை தயாரிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளது.

இந்த பயணிகள் விமானம் உள்நாட்டு பயணத்துக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்படுகிறது. 1988ம் ஆண்டு முடிவடைந்த யுஎசழ உளு-748 திட்டத்திற்குப் பிறகு, இந்தியாவில் முழுமையான பயணிகள் விமானம் தயாரிக்கப்படுவது இதுவே முதல் முறை என்பதால், ளுது-100 திட்டம் ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும் என ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனம் தெரிவித்து உள்ளது.

வரும் டிசம்பரில் இந்திய-ரஷ்யா வருடாந்திர உச்சிமாநாட்டிற்காக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்தியாவிற்கு வருகை தருவதற்கு முன்னதாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. உலகளாவிய புவிசார் அரசியல் பதட்டங்கள் நீடித்தாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை இந்த ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது. ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா இந்தியாவிற்கு அதிக வரி விதித்த போதிலும், இந்தியா ரஷ்யாவுடனான உறவை வலுப்படுத்த விரும்புகிறது என்பதை இந்த புதிய ஒப்பந்தம் எடுத்துரைக்கிறது என சர்வதேச அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

(ஐ)



## பிரசாந்த் கிஷோருக்கு இரு மாநிலங்களில் ஓட்டு

பீஹார் சட்டசபை தேர்தல் நவ.6 மற்றும் நவ.11 என இருகட்டங்களாக நடக்க இருக்கிறது. ஓட்டுப்பதிவுக்கான காலம் வெகு குறைவாகவே உள்ளதால் முக்கிய கட்சிகள் தீவிர ஓட்டு வேட்டையில் இறங்கி உள்ளன. ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் கூட்டணி நாள்தோறும் புதுப்புது அறிவிப்புகளையும், வாக்குறுதிகளையும், எதிரணி கூட்டணி மீது குற்றச்சாட்டுகளையும் கூறி பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி, எதிர்க்கட்சிகள் அடங்கிய இண்டி கூட்டணி அல்லாது, பிரபல தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சியும் தேர்தல் களத்தில் இறங்கி உள்ளது. பிரசாரத்திற்கு போகும் இடங்களில் எல்லாம், வாக்குறுதிகளை அவர் அள்ளி வீசி வருகிறார். இந் நிலையில், பிரசாந்த் கிஷோருக்கு இரு மாநிலங்களில் ஓட்டுரிமை இருக்கும் விவரம் தற்போது வெளியாகி உள்ளது. ஒரு ஓட்டானது, மேற்கு வங்கத்தில் இருக்கிறது. எண் 121, கலிகாட் சாலை, பஹபானிபூர் என்ற முகவரியில் இந்த ஓட்டு உள்ளது. இந்த முகவரியில் தான் திரிணமுல் காங்கிரசின் அலுவலகமும் இருக்கிறது. பஹபானிபூர் தொகுதி முதல்வர் மம்தா பானர்ஜியின் தொகுதியாகும். மேற்கு வங்கத்தில் திரிணமுல் காங்கிரஸ் கட்சிக்கு 2021ம் ஆண்டு தேர்தல் வியூக வகுப்பாளராக பிரசாந்த் கிஷோர் பணியாற்றினார். அப்போது திரிணமுல் காங்கிரஸ் அலுவலக முகவரியை அடையாளமாக கொண்டு அவர் ஓட்டுரிமையை பெற்றுள்ளார். அவரின் ஓட்டுச்சாவடி ராணிஷங்கரி லேனில் உள்ள செயிண்ட் ஹெலன் பள்ளியாகும். மற்றொரு ஓட்டானது, பீஹாரில் கர்காஹர் தொகுதியில் இருக்கிறது. இந்த தொகுதி சாசாரம் எம்பி தொகுதிக்குள் வருகிறது. அவரின் ஓட்டுச்சாவடி மத்ய வித்யாலாய, கோனார் கிராமம், ரோஹ்டாஸ் மாவட்டம் என்ற முகவரில் இருக்கிறது. ஒரு நபருக்கு இரு இடங்களில் ஓட்டுரிமை இருப்பது எப்படி என்ற கேள்வியை பலரும் எழுப்பி இருக்கின்றனர். இதுகுறித்து அவரது கட்சி நிர்வாகி தரப்பில் கூறுகையில், பீஹாரில் வாக்காளர் பட்டியலில் தமது பெயரை அவர் சேர்த்துள்ளார். அதே நேரத்தில் மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியலில் உள்ள பெயரை நீக்க உரிய விண்ணப்பத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பித்து இருக்கிறார். அந்த விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். 1950ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 17ன் படி சட்டப்படி வாக்காளராக தகுதிபெற்ற எவர் ஒருவரும், இரு இடங்களில் ஓட்டுரிமையை வைத்திருக்கக்கூடாது. பிரிவு 18ன் படி, ஒரு வாக்காளர் ஒரே தொகுதியில், இரு இடங்களில் தமது ஓட்டை பதிவு செய்து வைத்திருக்கக்கூடாது. ஒரு வேளை இருப்பிடத்தை மாற்றினால் கட்டாயம் முகவரி மாற்றத்திற்கு விண்ணப்பித்து அதை சரி செய்திருக்க வேண்டும்.

(ஐ)

## விஜய் மீது வழக்குப் பதிவு செய்யாதது ஏன்? சீமான் கேள்வி

திருநெல்வேலி: கரூர் சம்பவத்தில் தவெக தலைவர் விஜய் மீது வழக்குப்பதிவு செய்யாதது ஏன்? என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பி உள்ளார்.



திருநெல்வேலியில் நிருபர்களிடம் சீமான் கூறியதாவது: பாஜ கூட்டணிக்கு வராவிட்டால் விஜய் மீது சிபிஐ விசாரணை தீவிரமடையும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விஜய் ரூ.20 லட்சம் வழங்கியதற்குக் காரணம், சிபிஐ விசாரணையில் சம்பந்தப்பட்ட குடும்பங்கள் எதிராகப் பேசிவிடக் கூடாது என்பதற்காகத்தான். தவெக தலைவர் விஜய் மீது வழக்குப்பதிவு செய்யாதது ஏன்? 41 பேர் இறப்புக்குக் காரணமான விஜய் மீது வழக்குப்பதிவு செய்யவில்லை என்றால் சிபிஐ வழக்கு விசாரணை எப்படி இருக்கும்.

மாநில போலீஸ் விசாரிக்கும் போது முன்ஜாமின் கேட்ட ஆனந்த், சிபிஐ விசாரணை வந்த பிறகு முன் ஜாமின் மனுவைத் திரும்பப் பெற்றது ஏன்? விஜயை சிபிஐ பாதுகாக்கப் போகிறதா? கரூர் சம்பவத்தில் எப்ஐஆரில் விஜய் பெயர் சேர்க்கப்படாதது குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் தான் பதில் அளிக்க வேண்டும். நாட்டைப் பற்றி கவலைப்படுபவர்கள் என் பின்னால் வரட்டும். நடிகர்கள் பின்னால் செல்பவர்கள் என் பின்னால் வர வேண்டாம்.

ஆளுங்கட்சியாக இருக்கும்போது டாஸ்மாக்கைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதும், எதிர்க்கட்சியாக இருக்கும்போது டாஸ்மாக்கிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதும்தான் திமுகவின் பாலிசி.

பிப்ரவரி 7ம் தேதி திருச்சியில் நாம் தமிழர் கட்சி மாநில மாநாடு நடைபெறும். அதில் அனைத்து சட்டசபை தொகுதி வேட்பாளர்களும் முழுமையாக அறிவிக்கப்படுவார்கள். திருச்சியில் மாநாடு நடைபெறுவதால் திருப்புமுனை என்று நினைக்க வேண்டாம், எங்கள் திருப்பம் எங்களது சிந்தனையில் இருக்கிறது. மக்கள் மனநிலையில் மாற்றம் வந்தால் எந்தக் கொம்பாதி கொம்பனையும் தேர்தலில் மக்கள் தோற்கடிப்பார்கள். இவ்வாறு சீமான் கூறினார்.

(ஐ)

## மேக விதைப்பு நடவடிக்கை நிறைவு: டில்லியில் செயற்கை மழைக்கு வாய்ப்பு

மேக விதைப்பு செயல்முறை பணி நிறைவு பெற்றுள்ளதால், டில்லியில் செயற்கை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

காற்று மாசுபாட்டை சமாளிக்க டில்லியின் மேக விதைப்பு செயல்முறை பணி தற்போது முடிவடைந்துள்ளது. வானிலை அனுமதித்தால் மாலையில் மற்றொரு சுற்று மேற்கொள்ளப்படலாம். இந்த செயல்முறை புராரி, மயூர் விஹார், கரோல் பாக் ஆகிய இடங்களில் செய்யப்பட்டது என்றனர்.

டில்லி முதல்வர் ரேகா குப்தா கூறுகையில், டில்லியின் மாசுபாட்டை நிவர்த்தி செய்ய எண்ணற்ற நடவடிக்கைகளை எடுத்து வருவதால், செயற்கை மழை பற்றிய பிரச்னை குறித்து நாங்கள் தொடர்ந்து விவாதித்து வருகிறோம். மேக விதைப்பு டில்லியின் மாசு பிரச்னையை தீர்க்க முடியும் என்று நம்பிக்கையுடன், மேக விதைப்பு சோதனையையும் நடத்தியுள்ளோம். இது ஒரு பரிசோதனை. இதனால் என்ன நடக்கும் என்று பார்ப்போம். சோதனை வெற்றியடைந்தால், டில்லி மக்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு தீர்வு வெளிப்படும் என்று நான் நம்புகிறேன்.

டில்லியில் இது முதல் முறையாகும் என்பதால் இது நம் அனைவருக்கும் புதியது. ஆனால் இந்த சோதனை வெற்றிபெறவும், டில்லி இதனால் பயனடையவும் நான் பிரார்த்திக்கிறேன்.

இந்த நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட விமானம் உத்தரபிரதேசத்தின் கான்பூரில் இருந்து புறப்பட்டது. டில்லி அரசின் தலைமையிலான இந்த முயற்சி கான்பூர் ஐஐடியுடன் இணைந்து செய்யப்பட்டது. (ஐ)



# பெயரில் என்ன இருக்கிறது?

நாராயணி சுப்ரமணியன்




செங்கோண முக்கோணத்தின் அடிப்படையான பண்பை விளக்கும் பிதாகரஸ் தேற்றம் தெரியுமா? பொருட்களின் இயக்கம் பற்றிய நியூட்டனின் மூன்றாம் விதி? உயிரினங்களின் உருவாக்கம் பற்றிய டார்வினின் பரிணாமத் தத்துவம்? பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது என்பதை விளக்கும் ஐன்ஸ்டைனின் சார்பியல் தத்துவம்? வாயுக்களின் செயற்பாடு பற்றிய பாயில் விதி?

அடிப்படை அறிவியல் தெரிந்த எல்லோருக்கும் இவை கட்டாயமாகத் தெரிந்திருக்கும். இன்னும் கொஞ்சம் யோசித்தால் ஹபிள்ஸ் தொலைநோக்கி, ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி, பக்டீரியாக்களை இனங்காண உதவும் க்ராம் சாயமேற்று முறை (புசயஅ'ள ளவயபைைெப அநவாழன), நிலநடுக்கத்தின் தீவிரத்தன்மையைக் குறிக்கும் ரிக்டர் அளவுகோல், உயிரிகளுக்குள் நிகழும் க்ரெப்ஸ் சுழற்சி, ஜூலியஸ் ரிச்சார்ட் பெட்ரியால் உருவாக்கப்பட்டு எல்லா நுண்ணுயிரியல் ஆய்வகங்களிலும் பயன்படுத்தப்படும் பெட்ரி தட்டு (ீநவசை னளைா), ஒலியின் அளவு பற்றிய டாப்ளர் விதி, பாலைச் சுத்திகரிக்கும் பாஸ்டர் முறை, கணித செட்களை விளக்கும் வென் வரைபடம் (ஏநெ னயைபசயஅ) என்று ஒரு பெரிய பட்டியலையே சொல்லலாம். இவை அனைத்துமே விஞ்ஞானிகளின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை. இந்தப் பட்டியலில் இருக்கும் ஒரு பெயர்கூட பெண் விஞ்ஞானிகளை அடிப்படையாகக் கொண்டதில்லை. மீண்டும் ஒருமுறை பட்டியலை வாசித்துப் பாருங்கள்.

லமார்க் (Lamarck) என்கிற இயற்கையியலாளரை அனைவரும் அறிந்திருப்போம். உறுப்புகள் பயன்படுத்தப்படுவதைப் பொறுத்து அவை அதிகமாகவோ குறைவாகவோ வளர்ந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படும் என்கிற அடிப்படையில் இவர் ஒரு கருதுகோளை முன்வைத்தார். அதற்காக அவர் கொடுத்த உதாரணமும் உலகப் புகழ்பெற்றது. மரங்களை எட்டிப் பிடிப்பதற்காக ஓர் ஒட்டகச்சிவிங்கி தொடர்ந்து சிரமப்பட்டு கழுத்தை நீட்டினால், அதன் கழுத்து காலப்போக்கில் வளர்ந்துவிடும் என்றும், அதன் சந்ததிக்கும் நீண்ட கழுத்து இருக்கும் என்றும் அவர் விளக்கினார். இது தவறானது என்பது பல விதங்களில் அழுத்தம் திருத்தமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆனால் லாமார்கிசம் என்கிற பெயர் காரணமாக அவரது பெயர் வரலாற்றில் நிரந்தமாக இடம்பிடித்துவிட்டது.

பெயரின் சக்தி இதுதான். டார்வின் என்ன சொன்னார், நியூட்டன் விதி என்ன என்பவை எல்லாம் துல்லியமாக நமக்கு நினைவில் இல்லாவிட்டாலும் அவர்களின் பெயர் மறக்காது. அறிவியலாளர்கள் என்றதும் அவர்களை நாம் நினைவுகூர்கிறோம். ஆகவே ஒரு கண்டறிதலுடன் அறிவியலாளரின் பெயர் இணைந்திருப்பது பல நன்மைகளைத் தரும்.

லிசா மெய்ட்னர்



அந்தப் பின்னணியில் பார்த்தால் பெண் அறிவியலாளர்கள் இருட்டடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சில உதாரணங்கள் மூலம் இதைத் தெளிவாக விளக்கலாம். நம் அனைவருக்கும் நன்கு தெரிந்த தனிம அட்டவணையை (ீநசழைனஉை வயடிடந) எடுத்துக்கொள்வோம். இதில் 118 தனிமங்கள் இருக்கின்றன. இதில் 15 தனிமங்களுக்கு அறிவியலாளர்களின் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஒரே ஒரு தனிமத்துக்கு மட்டுமே (மெய்ட்னரியம்) லிசா மெய்ட்னர் பெண் அறிவியலாளரின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. கியூரியம் என்கிற தனிமம் மேரி க்யூரி, பியரி க்யூரி ஆகிய இருவரையும் குறிப்பதால் அது பெண் அறிவியலாளரை மட்டுமே முன்னிலைப்படுத்துகிறது என்று சொல்லிவிட முடியாது. ஆக, 14க்கு ஒன்று. இதுதான் தனிமங்களில் பெண் பெயர்களின் விகிதம்.

அமெரிக்க விண்வெளி அமைப்பான நாசாவில் பத்துக்கும் மேற்பட்ட முக்கியத் தொலைநோக்கிகள் உண்டு. இவற்றில் ஆறு தொலை நோக்கிகளுக்கு ஆண் விஞ்ஞானிகளின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. நான்சி கிரேஸ் தொலைநோக்கி மட்டுமே ஒரு பெண் விஞ்ஞானியின் பெயரை அடிப்படையாகக் கொண்டது. நான்சி கிரேஸ் ஒரு முக்கியமான வானியலாளர். 'ஹபிள் தொலைநோக்கியின் தாய்' என்று அழைக்கப்பட்டவர். வாழ்நாள் முழுவதும் பெண்கள் ஸ்டெம் துறைகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தவர். பெண் என்பதால் பல அடக்குமுறைகளைச் சந்தித்தவர். அவருக்கு இப்படி ஓர் அங்கீகாரம் கிடைத்திருப்பது நல்லதுதான் என்றாலும் 2025 ஆம் ஆண்டில்கூட ஆறுக்கு ஒன்று என்கிற விகிதம்தான் பெண் அறிவியலாளர்களுக்குக் கிடைக்கிறது என்பது உறுத்துகிறது.

விண்வெளியில் கண்டறியப்படும் புதிய பகுதிகளுக்கு விஞ்ஞானிகளின் பெயர்களை வைப்பதும் ஒரு பொதுவான வழக்கம். அதில் இருக்கும் பாலினப் பாரபட்சத்தை ஆராய்கிறார் வானியலாளர் ஆனி லெனாக்ஸ். நிலவில் இருக்கு 1578 பள்ளங்களில் இரண்டு சதவீதப் பள்ளங்களுக்கு மட்டுமே பெண் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றனவாம். செவ்வாயில் இருக்கும் 280 நிலவியல் அமைப்புகளில் 1.8மூ மட்டுமே பெண் பெயர்கள் தாங்கியவை. 'புதனில் பெண்களின் நிலை கொஞ்சம் பரவாயில்லை. அங்கு இருக்கும் நில அமைப்புகளில் 11.8மூ இடங்களுக்குப் பெண் பெயர்களை வைத்திருக்கிறார்கள்' என்று அவர் கிண்டலாக எழுதுகிறார். வானியலின் இத்தனை கருமேகங்களுக்கு நடுவில் ஒரு சின்ன ஒளிக்கீற்றும் இருக்கிறது. உனு86081 என்கிற நட்சத்திரத்துக்கு இந்திய அறிவியலாளர் பிபா சௌதுரியின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. சூரியனிலிருந்து 340 ஒளி ஆண்டுகள் தொலைவில் மஞ்சள் வெளிச்சத்தில் பிபா ஒளிர்கிறது.

நட்சத்திரங்கள், விண்வெளிக்கூறுகளைப் போலவே புதிதாகக் கண்டறியப்படும் உயிரினங்களுக்கும் பெயர்கள் வைக்கும்போது விஞ்ஞானிகளை அங்கீகரிக்கும் வழக்கம் இருக்கிறது. அங்கும் இதே நிலைதான். 2022இல் ஓர் ஆய்வுக் கட்டுரை வெளியானது. அதில் புழுக்களின் பெயர்கள் விரிவாக ஆராயப்பட்டன. கடந்த 20 ஆண்டுகளில் புதிதாக வைக்கப்படும் பெயர்களில் 19மூ மட்டுமே பெண் ஆராய்ச்சியாளர்களை அடிப்படையாகக் கொண்டவை என்று ஆய்வில் தெரியவந்தது. பக்டீரியா மற்றும் ஆர்க்கியா நுண்ணுயிரிகளில் புதிதாக வைக்கப்பட்ட 224 பெயர்களில் 14மூ மட்டுமே பெண் விஞ்ஞானிகளை அடிப்படையாகக் கொண்டவை. அட, இவ்வளவு ஏன், ஆலோ (சோற்றுக்கற்றாழை இந்தக் குழுவைச் சேர்ந்ததுதான்) என்கிற ஒரு பேரினத்தில் உள்ள எல்லாச் சிற்றினப் பெயர்களையும் ஆராய்ந்து பார்த்ததில், 80மூ பெயர்கள் ஆண் விஞ்ஞானிகளை அடிப்படையாகக் கொண்டவை என்பது தெரிந்தது.

அணுக்கள் எலக்ட்ரான்களை வெளியேற்றும் இயற்பியல் நிகழ்வுகளைத் துல்லியமாக விளக்குவது ஆகர் விளைவு என்று அழைக்கப்பட்டு வந்தது. இதை 1922இல் லிசா மெய்ட்னர் கணித்துச் சொன்னார். 1923இல், அதாவது ஓர் ஆண்டு கழித்து பியர் ஆகர் என்பவரும் தாமாகவே இதைக் கண்டறிந்தார். ஆனால், இது ஆகர் விளைவு என்று மட்டுமே அழைக்கப்பட்டு வந்தது. கடந்த 30 ஆண்டுகளாக, இதை 'ஆகர் மெய்ட்னர் விளைவு' என்று அழைக்க வேண்டும் என்று அறிவியல் உலகம் வலியுறுத்தி வருகிறது. பல விஞ்ஞானக் கூட்டமைப்புகள் இதை இப்போதும் பரிந்துரைக்கின்றன. ஆனால், இன்றுவரை இந்தப் பெயர்மாற்றம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஆய்வுக் கட்டுரைகள் என்று வரும்போது அவரது புரிதலுக்கும் அரசியல் சார்புக்கும் ஏற்றபடி அறிவியலாளர்கள் இந்த விளைவைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் கனவாகத்தான் இருக்கிறது.

ஹென்ரியட்டா ஸ்வான் லீவிட் என்கிற அமெரிக்க அறிவியலாளர், ஒரு செபீட் நட்சத்திரத்தின் ஒளிரும் காலத்தை அறிந்தால், அதன் ஒட்டுமொத்த பிரகாசத்தைக் கண்டறியலாம், அதை வைத்து நட்சத்திரத்தின் தூரத்தை அறியலாம் என்கிற விதியைக் கண்டறிந்தார். 1912இல் அவர் இதை ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டார். ஆனால், நெடுங்காலம் வரை இது ீநசழைன டுரஅைழளவைல டயற என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது. பல தசாப்தங்கள் கழித்து, 'இது இனிமேல் லீவிட் விதி என்று அழைக்கப்பட வேண்டும்' என 2009இல்தான் வானவியல் கூட்டமைப்புகள் வலியுறுத்தின. இப்போது ஒருவழியாக இது லீவிட் விதி என்றே குறிப்பிடப்படுகிறது.

ஹென்ரியட்டா ஸ்வான் லீவிட்



ஆலிஸ் பால் என்கிற பெண் அறிவியலாளர், 1915இல் ஒரு வேதியியல் முறையை உருவாக்கினார். இந்த முறைப்படி சால்மூக்ரா எண்ணெயைப் பிரித்து நோயாளிகளுக்குக் கொடுத்தால் தொழுநோயாளிகளின் உடலில் மருந்து சரியானபடி சென்று சேரும் என்பது உறுதியானது. ஆனால், அவரின் கண்டறிதல்கள் பதிப்பிக்கப்படுவதற்கு முன்பே அவர் இறந்துபோனார். ஆலிஸ் பாலின் முறையில் ஒரு சின்ன மாற்றத்தைச் செய்த அவரின் சக அறிவியலாளர் ஆர்தர் லைமன் டீன், 'டீன் முறை' என்று பெயரிட்டு அதைப் பிரசுரம் செய்தார். தொழுநோய் வல்லுநரான ஹால்மன், டீனின் செயல்முறை தவறானது என்றும், பால் செயல்முறை என்றுதான் அது அழைக்கப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து கேட்டுக்கொண்டார். இவையெல்லாம் நடந்து பல தசாப்தங்களுக்குப் பிறகே ஆலிஸ்/க்கான அங்கீகாரம் கிடைத்தது.

ஓர் அறிவியலாளர் என்கிற முறையில் இந்த வரலாறுகள் எனக்குச் சலிப்பூட்டுகின்றன. அறிவியலில் இருக்கும் பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியில் ஒரு பெயருக்காகவும் போராட வேண்டுமா என்று யோசிக்க வைக்கின்றன. இதனாலேயே பல பெண் அறிவியலாளர்கள், 'ஏதோ பேரை வைத்து கொள்ளுங்கள் என்னால் இனிமல் முடியாது' என்று விலகியிருப்பார்கள் என்றும் தோன்றுகிறது. நியாயமான ஓர் அங்கீகாரத்துக்கே ஸ்டெம் பெண்கள் போராட்டம் செய்தால்தான் முடியும் என்பதுதான் கசப்பான நிதர்சனம்.

**ஏன் பெண்களின் பெயர்கள் வைக்கப்படுவதில்லை?**

காரணங்கள் எளிதானவை, எளிதில் யூகித்து விடக்கூடி

(7ஆம் பக்கம் பார்க்க..)

# கென்யாவின் கடலோர பகுதியில் சிறிய ரக விமானம் விபத்து: 12 பேர் பரிதாப பலி



கென்யாவின் கடலோர பகுதியான குவாலேயில் சிறிய ரக விமானம் விபத்தில் சிக்கியதில் 12 பேர் உயிரிழந்தனர். மீட்பு பணிகள் முழு வீச்சில் நடக்கின்றன.

கிழக்கு ஆப்ரிக்க நாடான கென்யாவின் கடலோரப் பகுதியான குவாலேயில் மசாய் மாரா தேசிய சரணாலயத்திற்கு சென்று கொண்டிருந்த போது சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானது. இந்த தேசிய சரணாலயம் மிகவும் பிரபலமான சுற்றுலாத்தலமாகும். டயானி விமான நிலையத்தில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மலைப்பாங்கான மற்றும் காட்டுப்பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இந்த விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். விமானம் விபத்துக்குள்ளான இடம் மலைப்பகுதி என்பதால் மீட்பு பணிகளில் சிரமம் நீடிக்கிறது என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விமான விபத்தினை கென்யா சிவில் விமான போக்குவரத்து ஆணையம் உறுதி செய்துள்ளது. மேலும் இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது என தெரிவித்துள்ளது. (ஐ)

## மீண்டும் காட்டாட்சிக்கு உலகம் திரும்பிச் செல்வதா: டிரம்புக்கு சீனா சூடு



மலேசியாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டில், சீனப் பிரதமர் லி கியாங் பேசும்போது அமெரிக்காவின் வரி விதிப்பு முறைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். உலகம் மீண்டும் காட்டாட்சி முறைக்கு செல்லக்கூடாது என்று அவர் கூறினார்.

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக, அமெரிக்க அதிபர் டிரம்ப்-சீன அதிபர் இடையே மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. அமெரிக்காவுக்கு பதிலடி தரும் விதமாக அரிய வகை கனிமங்களை ஏற்றுமதி செய்வதில் சீனா கட்டுப்பாடு விதித்தது.

இதையடுத்து நவ., 1ம் தேதி முதல் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து சீன பொருட்களுக்கும், 100 சதவீதம் கூடுதல் வரி விதிப்பதாக அறிவித்தார். இந்த வரி விதிப்பு நிரந்தரமானது அல்ல என்றும் அடிக்கடி கூறுகிறார்.

ஆசியான் உச்சி மாநாட்டில், சீன பிரதமர் லி கியாங் பேசியதாவது: வர்த்தக விஷயங்களில், உலகம் மீண்டும் காட்டாட்சிக்கு திரும்பி செல்லக் கூடாது.

வலிமையானவர்கள் பலவீனமானவர்களை கொடுமைப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு அவர் பேசினார். சீனப் பிரதமர் லி கியாங், தென் கொரியாவில் ஜி ஜின்பிங் மற்றும் டொனால்ட் டிரம்ப் இடையேயான சந்திப்புக்கு சில நாட்களுக்கு முன்பு உலகில் வர்த்தக விஷயங்களில் ஒருதலைப்பட்சத்தை கண்டித்தார். (ஐ)

## இந்தியா விஷயத்தில் பெரிய தவறு செய்தார் டிரம்ப்:




அதிபர் டிரம்ப் தலைமையிலான நிர்வாகத்தின் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கையை அமெரிக்க முன்னாள் வர்த்தக செயலாளர் ஜினா ரைமண்டோ கடுமையாக விமர்சித்தார்.

ரஷ்யாவுடன் எண்ணெய் வர்த்தகம் செய்ததற்காக டிரம்ப் இந்தியா மீது 50மூ வரிகளை விதித்து அதிரடி நடவடிக்கை எடுத்தார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. தற்போது அதிபர் டிரம்ப் தலைமையிலான நிர்வாகத்தின் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைக்கு ஜினா ரைமண்டோ கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அவர் அளித்த பேட்டி: வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் டிரம்ப் நட்பு நாடுகளை எரிச்சலூட்டி வருகிறார். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நடந்து வரும் வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில், டிரம்ப் நிர்வாகம் மிக பெரிய தவறு செய்தது.

அமெரிக்கா மற்ற நாடுகளுக்கு நல்ல கூட்டாளியாகவோ அல்லது நண்பராகவோ இல்லாவிட்டால் அது பலவீனமாகிவிடும். அமெரிக்கா தனியாக இருப்பது ஒரு பேரழிவை ஏற்படுத்தும்.

ஐரோப்பா அல்லது தென கிழக்கு ஆசியாவுடன் வலுவான உறவுகள் இல்லாமல் அமெரிக்க நிர்வாகம் திறம்பட செயல்பட முடியாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## வெளிநாட்டவர்கள் அமெரிக்கா வந்து செல்ல புது வழிகாட்டு முறைகள் வெளியீடு



வெளிநாட்டவர்கள் மற்றும் க்ரீன் கார்டு உள்ளவர்கள் அமெரிக்கா வந்து, செல்வதற்கு புதிய வழிகாட்டு முறைகளை அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இது வரும் டிச.,26 முதல் அமலுக்கு வருகிறது.


அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்றது முதல் வெளிநாட்டவர்கள் விவகாரத்தில் பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், தற்போது மேலும் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, வெளிநாட்டவர்கள் மற்றும் க்ரீன் கார்டு உள்ளவர்கள் அமெரிக்கா வந்து, செல்வதற்கு புதிய வழிகாட்டு முறைகளை அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் மற்றும் க்ரீன் கார்டு உள்ளவர்கள் அமெரிக்காவுக்கு வரும் போதும், செல்லும் போதும், புகைப்படங்கள் மற்றும் கைரேகை விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும். அமெரிக்காவில் உள்ள முக்கிய விமான நிலையங்களில் மட்டும் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அனைத்து விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் எல்லைகளில் இது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது வரும் டிச.,26 முதல் அமலுக்கு வருகிறது.

முன்பு 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் 79 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இந்த நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அனைவருக்கும் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், 'போலி ஆவணங்கள் மூலம் அமெரிக்காவுக்கு வந்து செல்வது தடுக்கப்படும். அதேபோல, இந்த நடவடிக்கையின் மூலம் எல்லை பாதுகாப்பை பலப்படுத்தப்படுவதோடு, ஆள்மாறாட்டம் மற்றும் விசா காலம் முடிவடைந்தும் சட்டவிரோதமாக தங்கியிருப்பதை தடுக்க முடியும்,' என்றனர்(ஐ)

## இது தேவையில்லாத வேலை: அணு ஆயுத ஏவுகணை சோதனை நடத்திய ரஷ்யாவை சாடிய அதிபர் டிரம்ப்



ரஷ்யாவின் அணுசக்தி ஏவுகணை சோதனை தேவையில்லாதது. இதற்கு பதிலாக போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என ரஷ்ய அதிபர் புடினை அதிபர் டிரம்ப் கடுமையாக சாடியுள்ளார்.

ரஷ்யா, உக்ரைன் - இடையிலான போர் தொடங்கி 3 ஆண்டுகளை கடந்து விட்டது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் உள்பட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சூழலில், அணுசக்தி ஏவுகணையான புரெவெஸ்ட்னிக் சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்து இருந்தார்.

இது குறித்து நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: அவர்கள் எங்களுடன் மோதுவதில்லை. நாங்கள் அவர்களுடன் சண்டையிடுவதில்லை. நாங்கள் ஏவுகணை சோதனை நடத்தி வருகிறோம். புடினும் அணுசக்தி ஏவுகணை சோதனை நடத்துவது தேவையில்லாதது. இது பொருத்தமானதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

சொல்லப்போனால் அவர் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். ஒரு வாரத்தில் முடிய வேண்டிய போர், தற்போது நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. ஏவுகணையை சோதிப்பதற்கு பதிலாக போரை புடின் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## செவ்வந்திக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவத்தின் துப்பாக்கிதாரி அன்றைய தினமே பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும், துப்பாக்கியை நீதிமன்ற வளாகத்துக்குள் கொண்டு வந்த இஷாரா செவ்வந்தி என்பவரைக் கைது செய்வதற்குப் பாதுகாப்புப் பிரிவினர் கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

இதன்படி, கடந்த 14ஆம் திகதி நேபாளத்தில் தங்கியிருந்தபோது இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில், ஷாரா செவ்வந்தி தப்பிச் செல்வதற்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த பலரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

## டொப்பாஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் இந்த மாதம் 8 ஆம் திகதி முதல் வீட்டில் இருந்து காணாமல்போயிருந்தார் எனவும், இது குறித்து அவரது குடும்பத்தினர் நுவரெலியா பொலிஸ 'ில் புகார் ஒன்றை முன்வைத்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை டொப்பாஸ் வனப்பகுதியில் விறகு வெட்டச் சென்ற தொழிலாளர்கள் குழுவொன்று வனப்பகுதியில் ஒரு சடலம் இருப்பதைக் கண்டறிந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, நுவரெலியா பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பின்னர், சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சடலம் அவரது தந்தையால் அடையாளம் காணப்பட்டது எனவும், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நுவரெலியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய , மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா மகாஜன கட்சி என்பன இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதில் பங்கேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மலையகத்தின் இரு பிரதான கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பன இக்கூட்டத்தில் பங்கேற்காது எனத் தெரியவருகின்றது.

புதிய எதிர்க்கட்சி கூட்டணி தொடர்பில் அறிவிப்பு விடுப்பதற்காக கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பிலும் மேற்படி கட்சிகள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனையடுத்து இந்த வழக்கு இன்று மீண்டும் அழைக்கப்பட்ட நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்தி சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

# கைக்குண்டு வெடித்ததில் 3 சிப்பாய்கள் காயம்



கைக்குண்டு வெடித்ததில் மூன்று சிப்பாய்கள் காயமடைந்த சம்பவம் மாதுஓயாவில் இடம்பெற்றுள்ளது.

மாதுஓயா இராணுவ பயிற்சி பாடசாலையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே கைக்குண்டு வெடித்ததில் சிப்பாய்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

# கோபா குழுவிற்கு வடமேல் மாகாணசபைக்கு அழைப்பு



ஆறு மாடிக் கட்டடத்தின் நிர்மாணத்தில் மாகாணசபை அதிக சுமையை ஏற்கும் வகையில் ஒப்பந்தக்காரரினால் தயாரிக்கப்பட்ட நிர்மாணக் கொள்முதல் நடைமுறையைத் தெரிவுசெய்து சாத்தியக்கூற்று அறிக்கையும் பெற்றுக்கொள்ளப்படவில்லை கோபா குழு கேள்வி

வடமேல் மாகாணசபை மற்றும் குருநாகல் மாநகரசபை ஆகியன இணைந்து ஆறுமாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக கேள்விப் பத்திரங்களைக் கோரி ஒப்பந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்ததுடன், இது தொடர்பில் காணப்படும் மேற்பார்வை நடவடிக்கைகள் காரணமாக இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருப்பது அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) தெரியவந்தது. இதுபோன்ற கட்டடங்களை அமைப்பதற்கு முன்னர் சாத்தியக்கூற்று ஆய்வு அறிக்கை பெறவேண்டியிருக்கின்றபோதும் அவ்வாறான அறிக்கை பெற்றுக் கொள்ளப்படவில்லையென்பதும் இங்கு தெரியவந்தது. அத்துடன், விசேடமான வடிவமைப்பைக் கொண்ட கட்டுமானம் இன்றி, சாதாரண வகையிலான அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கு மேல்மாகாண சபை அதிக சுமையை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒப்பந்தக்காரரினால் நிர்மாண கொள்முதல் நடைமுறை தெரிவுசெய்யப்பட்டிருப்பது பிரச்சினைக்குரியது என்பதும் கோபா குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

வடமேல் மாகாணசபை தொடர்பான 2023, 2024ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் அதன் செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் அவர்களின் தலைமையில் அண்மையில் (23) கூடியபோதே இந்த விடயங்கள் தெரியவந்தன.

இதற்கமைய குறித்த கட்டுமானம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு மீண்டும் ஒருமுறை அதிகாரிகளை அழைப்பதற்கும், ஒரு மாத காலத்திற்குள் குறித்த கட்டடம் தொடர்பான பரிந்துரைகள், கொள்முதல் மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் அறிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்கள் சகலவற்றையும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.

மேலும், உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் வடமேல் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக அரசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் மற்றும் தாமதக் கட்டணத்தை வசூலிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இங்கு கேட்கப்பட்டதுடன், இது தொடர்பான அறிக்கையொன்றை திகதிகள் குறிப்பிட்டு இரண்டு மாதங்களுக்குள் கோபா குழுவுக்கு அனுப்பிவைக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு அரச காணிகள் குறித்து முறையான பதிவேட்டைப் பேணுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள போதும், குறித்த பதிவேடு அரசாங்க காணிகள் யாவற்றையும் அடையாளம் காண்பது, நீண்டகால குத்தகைக்குக் கொடுப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட மற்றும் அனுமதியளிக்கப்படாத காணிகள், நிலுவையில் உள்ள குத்தகைத் தவணைகள் போன்ற விடயங்களை இலகுவில் கண்டறியக் கூடிய வகையில் இல்லாமை குறித்தும் குழு கேள்வியெழுப்பியது.

அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தை வசூலிக்க அதிகாரிகள் தயக்கம் காட்டக்கூடாது என்றும், கோபா குழு இதற்குத் தேவையான அனைத்து ஆதரவையும் வழங்கும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கு அமைய, இந்த ஆண்டு இறுதிக்குள் வசூலிக்கப்பட வேண்டிய மொத்த தொகை குறித்து அறிக்கை வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக, சுமார் 85 மில்லியன் ரூபாய் வசூலிக்கப்படாத வரித் தொகை இருப்பதாகவும், இது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கோபா குழு அறிவுறுத்தியது.

இக்கூட்டத்தில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களான கௌரவ பிரதியமைச்சர்களான அரவிந்த செனரத், மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருன ஜயசேகர, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான (வைத்தியர்) ஜனக சேனாரத்ன, டி.கே. ஜயசுந்தர, ருவன்திலக ஜயக்கொடி, (சட்டத்தரணி) துஷாரி ஜயசிங்க, (சட்டத்தரணி) சாகரிகா அதாவுத, சுனில் ரத்னசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பெயரில் என்ன.....

யவை. ஒப்பீட்டளவில் ஒரு பெரிய கண்டறிதலுடன் தொடர்புள்ள இடத்துக்கு ஸ்டெம் பெண்கள் வருவதே குறைவு. அப்படியே வந்தாலும் அந்தக் குழுவில் இருக்கும் ஆண்கள்தான் இதைச் செய்திருக்க முடியும் என்று பிறர் நம்புவார்கள். யார் பெயர் வைக்கிறார்கள் என்பது அதிகாரம் சம்பந்தப்பட்ட ஒரு கேள்வி. இந்த அதிகார மையங்களில் பெண்களுக்கான பிரதிநிதிகள் குறைவு. ஆய்வுக்கான நிதியை வாங்கவும் ஆய்வகத்தில் வசதிகளைப் பெறவும் மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுகளை விவாதிக்கவுமே பெண்களுக்குப் பல தடைகள் இருக்கின்றன எனும்போது, இது ஒரு கூடுதல் போராட்டமாக மாறுகிறது. ஸ்டெம் பெண்கள் எல்லாராலும் இதற்காகப் பாடுபட முடியாது. ஆகவே பல ஆய்வுக் கட்டுரைகளில் நன்றியுரைகளிலும் அடிக்குறிப்புகளிலும் மட்டுமே பெண் அறிவியலாளர்களின் பெயர்கள் தங்கிவிடுகின்றன.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இன்னொரு பெயராக்கத்தையும் நிச்சயம் குறிப்பிடவேண்டும். இந்தப் பெயர்கள் நேரடி அறிவியலுக்குள் வருவதில்லை என்றாலும் கவனிக்கத்தக்கவை.

### அமெரிக்காவைத் தாக்கிய கத்ரீனா புயலை நினைவிருக்கிறதா? இர்மா புயல்? ஃப்ரான்சீன் புயல்?

20ஆம் நூற்றாண்டுக்கு முன்பாக அமெரிக்காவில் புயலுக்குப் பெயர் வைக்கும் வழக்கம் இருக்கவில்லை. சும்மா 'மிச்சிகன் புயல்', 'நியூயார்க் புயல்' என்றுதான் சொல்வார்கள். இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்க வானிலை ஆராய்ச்சியாளர்கள் புயல்களை அதிகமாக கவனித்தார்கள். அவ்வாறு கவனித்த புயல்களுக்குத் தங்களது காதலி அல்லது மனைவியின் பெயரை வைக்கத் தொடங்கினார்கள். குறிப்பாக தனக்குப் பிடிக்காத முன்னாள் காதலி/மனைவியின் பெயரைக் கோரமான புயல்களுக்கு வைப்பதிலும் ஆண் வானிலை ஆய்வாளர்கள் ஆர்வம் காட்டினார்கள். 'புயல்கள் பெண்களைப் போன்றவை' என்று வானிலை ஆய்வாளர்கள் சொல்வதாக 1972இல் ஒரு கட்டுரைகூட வெளியாகியிருக்கிறது. 'பெண்ணின் நிலையற்ற மனநிலையைப் பிரதிபலிக்கும்படி புயல்களுக்குப் பெண் பெயரை வைப்பதுதான் சரி. இல்லாவிட்டால் புயல் எச்சரிக்கையை யாரும் பொருட்படுத்தமாட்டார்கள்' என்கிறது 1977இல் வெளியான இன்னொரு கட்டுரை! பெண்களை வர்ணிப்பதைப் போலவே புயல்களையும் வர்ணிப்பதும் அந்தக் காலத்தில் ஒரு வழக்கமாக இருந்தது. 'அவள் கடற்கரையுடன் ஊடல் செய்கிறாள்', 'அவளது மனநிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை' என்றெல்லாம் புயலைப் பற்றிப் பேசுவார்கள்.

1970களில் பெண்கள் இதை எதிர்த்துக் குரல் கொடுக்கத் தொடங்கினார்கள். 'சும்மா போகிறபோக்கில் எங்களைப் பேரிடர்களோடு தொடர்புபடுத்துகிறீர்கள், இது வெறுப்பூட்டுகிறது' என்று அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் இதை மாற்றுவதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். ஆனால், அதைச் செயற்படுத்துவதில் அதிகார மையங்கள் சுணக்கம் காட்டின. 'ஆண் பெயர் வைத்தால் புயலைப் பார்த்துப் பயப்படமாட்டார்கள்' என்கிற பழைய பல்லவியைத் தொடர்ந்து பாடிய அதிகார அமைப்புகள், கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கு வந்தன. 1979இல் இந்த வழக்கம் ஒருவழியாக முடிவுக்கு வந்தது. ஆண்/பெண் இருவகைப் பெயர்களையும் புயல்களுக்கு வைக்கவேண்டும் என்கிற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 'பெயரில் என்ன இருக்கிறது?' என்கிற முந்தையை கேள்விக்கு இதையும் பதிலாக சொல்லலாம்.

ஆண்-பெண் என்கிற பாலின இருமைக்குள் பொருந்திவரக்கூடிய பெண்களுக்கே இந்நிலை என்றால், ஸ்டெம் துறையில் பால்புதுமையினரின் நிலை என்னவாக இருக்கிறது?







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2025 வெளியிடப்பெற்றது.